# 16

# தேவனுடைய திகைப்புக்குரிய "கணக்குவைக்கும் ஏற்பாடுகள்"

## (4:1–3, 5)

*நாம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்ற பவுலின் கலந்துரையாடலின் இருதயம் போன்ற மையப்பகுதியைக் கொண்டுள்ள ரோமர் 4ம் அதிகாரத்தின் படிப்பு ஒன்றைத் தொடங்கத் தயாராக இருக்கிறோம். இந்தப்பாடம் இந்த அதிகாரத்தின் தொடக்கத்தில் உள்ள ஒருசில வசனங்களில் மையங்கொண்டுள்ளது மற்றும் இதுவே இவ்வதிகாரத்திற்கு அறிமுகமாகவும் பயன்படும்.*

*நான், "எண்ணப்பட்டது" என்ற வார்த்தைக்குச் சிறப்புக்கவனம் கொடுக்க விரும்புகிறேன்: "ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது" (வசனம் 3ஆ). "அது எண்ணப்பட்டது" என்பது,* logizomai *என்பதிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பவுல்* logizomai *என்பதை (பல்வேறு வடிவங்களில்) நான்காம் அதிகாரத்தில் பதினோரு முறைகள் பயன்படுத்தினார். இந்த அதிகாரத்தில் 8ம் வசனம் தவிர மற்ற இடங்களில் இவ்வார்த்தையை* NASB *வேதாகமம், எப்போதுமே* "credits" *அல்லது* "credited" *என்றே மொழிபெயர்க்கிறது, 8ம் வசனத்தில் இது* "take into account" *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.*[1] *Lego ("நான் கூறுகிறேன்") என்பதே logizomai என்பதன் வேராக உள்ளது, இந்தச் சொற்றொடர் logos ("வார்த்தை") என்பதுடன் தொடர்புடையதாக உள்ளது. இது பவுலின் நாட்களில் பல்வேறு அர்த்தங்களைக் கொண்டிருந்தது,*[2] *ஆனால் "எண்ணுதல், கணக்கிடுதல், … கணக்கெடுத்தல்" என்பதே இதன் அடிப்படை அர்த்தமாக இருந்தது.*[3]

*Logizomai என்பது கணக்காளருடைய வார்த்தையாக இருந்தது. அவ்வாறே இதை ரோமர் 4ல் பவுல் பயன்படுத்தினார் என்று பெரும்பான்மையான எழுத்தாளர்கள் ஒப்புக்கொள்கின்றனர். ஜான்* R. W. *ஸ்டாட் என்பவர், "இது 'வரவுவைத்தல்' அல்லது 'கணக்கிடுதல்' என்பதை அர்த்தப்படுத்துகிறது, இது நிதி சார்ந்த அல்லது வணிகரீதியான சந்தர்ப்பப்பொருளில் பயன்படுத்தப்பட்டபோது, சிலவற்றைச் சிலரின் கணக்கில் இடுதல் என்பதைக் குறிப்பிடுகிறது" என்று எழுதினார்.*[4] *இவ்விதமாக* CJB *வேதாகமம், 3ம் வசனத்தைப் பின்வருமாறு மொழி பெயர்க்கிறது:* "[Abraham] put his trust in God, and it was *credited to his account* as righteousness." *நான் இப்பாடத்தை, "தேவனுடைய திகைப்புக்குரிய 'கணக்கு*

*வைக்கும் ஏற்பாடுகள்' " என்று அழைக்கிறேன். E. D. பர்ட்டன் என்பவர், ரோமர் 4ல், நாம் "மாபெரும் கணக்காளருடைய கணக்கிடும் அறையில்" இருக்கிறோம் என்று கருத்துத் தெரிவித்தார்.*[5]

*"தேவனுடைய திகைப்புக்குரிய 'கணக்குவைக்கும் ஏற்பாடுகள்' " என்ன என்பதை உங்களுக்கு நான் அறிவிக்க முடிய வேண்டும் என்பதற்காக நான் ஜெபிக்கிறேன். இது உங்களுக்கு உங்கள் கிறிஸ்தவ வாழ்வில் புதிய கண்ணோக்கங்களைக் கொடுத்து வேதனைப்படும் இருதயத்திற்குச் சந்தோஷத்தைக் கொண்டுவர முடியும்.*

## "ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான்" *(4:1-3)*

**பயபக்தியான ஒரு உதாரணம் (வசனம் 1)**

*நான்காம் அதிகாரம், "அப்படியானால் ... என்று சொல்லுவோம் ... ?" என்கிறது. "அப்படியானால்" என்பது 3:21-26ல் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்பது பற்றிப் பவுலின் அறிமுகத்தைக் குறிப்பிடுகிறது. "அப்படியானால், நம்முடைய தகப்பனாகிய*[6] *ஆபிரகாம் மாம்சத்தின்படி*[7] *என்னத்தைக் கண்டடைந்தான் என்று சொல்லுவோம்?" (4:1). 4ம் அதிகாரத்தில் பவுலின் குறிப்புரை யூத வாசகர்களைநோக்கி முதன்மையாக திருப்பப்பட்டது. யூதர்கள், ஆபிரகாமை மாம்சப்பிரகாரமான தங்களுடைய "முற்பிதா" என்று பெருமையுடன் குறிப்பிட்டனர் (லூக்கா 3:8; 16:24, 30; யோவான் 8:39, 53, 56; நடபடிகள் 7:2 ஆகியவற்றைக் காணவும்).*[8]

*மூல வசனத்தில், ''நம்முடைய தகப்பனாகிய'' என்பதை உடனடி யாகத் தொடர்ந்து ''மாம்சத்தின்படி'' என்பது வருகிறது,*[9] *மற்றும் NASBயும் பெரும்பான்மையான பிற மொழிபெயர்ப்புகளும் இதை இவ்வாறே இடுகின்றன. இந்த நிலைப்பாட்டில், இது ஆபிரகாம் யூதமக்களினத்தின் "மாம்சப் பிரகாரமான" முன்னோராக இருந்தார் என்பதைக் குறிப்பிடுகிறது. இருப்பினும், சிலர் ''மாம்சத்தின்படி'' என்பது "கண்டடைந்தான்" என்பதை மாற்றியமைக்க வேண்டும் என்று நம்புகின்றனர் (ASV வேதாகமத்தில் காணவும்), ஆனால் இது மிகக் குறைவான சாத்தியக்கூறையே கொண்டுள்ளது. இது செயல்விளைவில் பவுலை, "அப்படியானால் நம்முடைய தகப்பனாகிய ஆபிரகாம் மாம்சத்தின் படியான கிரியைகளைச் [அதாவது, தகுதியான செயல்களை] செய்வதினால் நீதிமா னாக்கப்படுதல்பற்றி என்னத்தைக் கண்டடைந்தான்?" என்று கேட்கச் செய்தது.*

*பவுல் அனேகமாக, விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்ற தமது கலந்துரையாடலில் ஆபிரகாமை அறிமுகப்படுத்துவதற்குப் பல காரணங்களைக் கொண்டிருக்கலாம். முதலாமிடத்தில், ஒரு போதகர் ஒரு கொள்கையை முன்வைத்துள்ளபின்பு, அந்தக் கொள்கைக்கு உறுதியான உதாரணம் ஒன்றைக் கொடுத்தல் என்பது ஒரு நல்ல கருத்தாக இருக்கிறது. விவரிப்புகள் என்பவை சத்தியத்தை ஒளியூட்டும் ஜன்னல்கள் என்று அழைக்கப்பட்டுள்ளன.*

*ஆபிரகாமை அந்த உதாரணமாகப் பயன்படுத்த வேண்டியது ஏன்? பழைய ஏற்பாட்டின் நாயகர்கள் எத்தனைபேரை வேண்டுமானாலும் பவுல் பயன்படுத்தியிருக்கலாம் (எபிரெயர் 11ஐக் காணவும்). ஆபிரகாமை ஏன் பயன்படுத்த வேண்டும்? யூதர்கள் ''பிதாவாகிய ஆபிரகாம்'' மீது விசேஷித்த பிரியம் கொண்டிருந்தனர். வேறு எவரும் அவர்களால் இதைவிட அதிக மாக மதிக்கப்பட்டதில்லை. வணக்கத்திற்குரிய இந்த முன்னோர் விசுவா சத்தின் அடிப்படையில் நீதிமானாக்கப்பட்டார் என்று பவுல் நிரூபிக்க*

முடியுமென்றால், யூதர்களிடம் அவர் தமது விஷயத்தை நிலைநாட்ட அது அதிக தொலைவு செல்லும்.

பவுல் இன்னொரு காரணத்திற்காகவும் ஆபிரகாமைத் தேர்ந்து கொண்டிருக்கலாம். தமது *செயல்கள்* மூலம் இரட்சிக்கப்படப் போதுமான அளவு *நல்லவராயிருந்த* ஒருவர் பற்றிய உதாரணத்தைத் தரும்படி யூதர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டால், ஆபிரகாம்தான் அனேகமாக அவர்களின் முதல் தேர்வாயிருப்பார்.

> யூதத்துவத்தில் ஆபிரகாமின் முக்கியத்துவத்தை மிகையாக மதிப்பிடுதல் என்பது கடினமாயிருக்கும். அவர், விக்கிரகாராதனை செய்துவந்த மக்களின் மத்தியில் உண்மையான ஒரே தேவனை ஆராதித்த நாயகராயிருந்தார். அவர், தேவனுடைய கட்டளைகள் தமக்குக் கொடுக்கப்படுவதற்கு முன்பே அவற்றிற்குக் கீழ்ப்படிந்திருந்தார் என்று நம்பப்படுகிறது. ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆகியோருடன் அவர் தேவனுக்கு எதிராகப் பாவம் செய்திராதவராகக் கருதப்பட்டார்.[10]

ஆகையால், ஆபிரகாம் தமது *கிரியைகளுக்குப்* பதிலாக தமது *விசுவாசத்தின்* அடிப்படையில் நீதிமானாக்கப்பட்டார் என்று யூதர்களை பவுல் இணங்கவைக்க முடியுமென்றால், அந்த அப்போஸ்தலர், "கிரியைகளினால் நீதிமானாக்கப்படுதல்" என்ற அவர்களுடைய "மிகப் பலத்த" விவாதங்களை ஒன்றுமில்லாததாக்கிவிடுவார்!

**ஏற்புடைய ஒரு உற்றுநோக்குதல் (வசனம் 2)**

பவுல், ஆபிரகாமுடைய வாழ்வை ஆராய்ந்துபார்க்கத் தயாராக இருந்தார். "ஆபிரகாம் கிரியைகளினாலே நீதிமானாக்கப்பட்டானாகில் மேன்மைபாராட்ட அவனுக்கு ஏதுவுண்டு" (4:2அ). விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்படுதல் "மேன்மை பாராட்டுதலை நீக்கிப்போட்டது" என்று சற்று முன்புதான் கூறியிருந்தார் (3:27ஐக் காணவும்). தமது கிரியைகள் நிமித்தம் மேன்மைபாராட்ட ஒருவரால் கூடுமென்றால், அந்த ஒருவர் ஆபிரகாமாகத்தான் இருக்க முடியும் என்று அவர் தமது சகயூதர்களுடன் ஒப்புக்கொள்வார். ஆபிரகாம் குறிப்பிடத்தக்க ஒரு தனிநபராயிருந்தார். அவர் ஒருவரே, தேவனாலேயே, "என் தாசன்" (ஏசாயா 41:8) என்றும், "உம்முடைய சிநேகிதன்" (2 நாளாகமம் 20:7), "தேவனுடைய சிநேகிதன்" (யாக்கோபு 2:23) என்றும் குறிப்பிடப்பட்டவராக இருக்கிறார். ஆபிரகாம், கிரியைகளின் அடிப்படையில் நீதிமானாக்கப்பட்டிருப்பார் என்றால், நிச்சயமாகவே அவர் மேன்மைபாராட்டச் சிலவற்றை கொண்டிருப்பார். இதைக் கூறியபின்பு பவுல், "ஆகிலும் தேவனுக்கு முன்பாக மேன்மைபாராட்ட ஏதுமில்லை" என்று உடனடியாகக்கூடக் கூறினார் (ரோமர் 4:2ஆ).

"ஆகிலும் தேவனுக்கு முன்பாக" என்பது எதை அர்த்தப்படுத்தியது என்பதைப்பற்றி எழுத்தாளர்கள் போராடுகின்றனர். மூலவசனத்தில் "not [*ou*] with [*pros*] God [*Theou*]" என்றுள்ளது.[11] ஒருவேளை, நேரெதிர்க்கருத்து ஒன்று இவ்விடத்தில் தரப்பட நோக்கம் இருக்கலாம்: *மக்களைப்*பொறுத்த வரையில், ஆபிரகாம் மேன்மைபாராட்டிக்கொள்ளச் சிலவற்றைச் செய்திருந்தார்; ஆனால் *தேவனைப்* பொறுத்த வரையில், அவர் [ஆபிரகாம்] மேன்மைபாராட்டக் காரணம் எதையும் கொண்டிருக்கவில்லை.[12] NLT வேதாகமத்தில், "From God's

point of view Abraham had no basis at all for pride'' என்றுள்ளது.

நாம் எவ்வளவு நல்லவர்களாயிருந்தாலும், எவ்வளவுதான் நற்கிரியைகளை நாம் செய்தாலும் நம்மால் தேவனை ஒருக்காலும் நமக்குக் கடனாளியாக்க முடியாது என்பதை நாம் புரிந்துகொள்ளுதல் அவசியமாக உள்ளது. ஆபிரகாம் பூரணப்பட்டவராக இருந்திருப்பினும் (அவர் அவ்வாறு இருக்கவில்லை), அவர் "தேவனுடைய கண்ணோக்கில் இருந்து'' மேன்மைபாராட்ட ஒன்றையும் கொண்டிருக்க மாட்டார். லூக்கா 17:10ஐ நினைவில் வைத்துக்கொள்ளவும்: "அப்படியே நீங்களும் உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவற்றையும் செய்த பின்பு: 'நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்யவேண்டிய கடமையை மாத்திரம் செய்தோம் என்று சொல்லுங்கள்.' ''

**இன்றியமையாத கொள்கை (வசனம் 3)**

ஆபிரகாம், "நீதிமானாக்கப்பட்ட'' தனிநபராக இருந்தார் என்பதைப்பற்றி எவரொருவரும் சந்தேகப்படுவதில்லை. அவர் எதன் அடிப்படையில் நீதிமானாக்கப்பட்டார்? என்பதே கேள்வியாக இருந்தது. தேவன் ஆபிரகாமின் கிரியைகளைக் கண்ணோக்கி, "உன்னை இரட்சிக்க அது போதுமானது'' என்று கூறவில்லை என்றால், பின்பு அவர் எந்த அடிப்படையில் பிதாவாகிய ஆபிரகாமை நீதிமானாக்கினார்? நன்கு அறியப்பட்ட வசனப்பகுதியொன்றைப் பவுல் மேற்கோளாகக் காண்பித்தார்: "வேதவாக்கியம் என்ன சொல்லுகிறது?[13] ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்று சொல்லுகிறது'' (4:3). இந்த மேற்கோள் ஆதியாகமம் 15:6ல் இருந்து வருகிறது. இவ்வசனத்தை ரோமர் 4ல் பவுல் பலமுறைகள் குறிப்பிட்டார் (வசனங்கள் 3, 9, 22, 23). இந்த அதிகாரம் ஆதியாகமம் 15:6ன் விளக்கவுரை என்று நினைக்கப்படலாம்.

ஆதியாகமம் 15ன் பின்னணி பவுலின் வாசகர்களுக்கு நன்கு பழக்கப்பட்டதாக இருந்தது. அந்த வரலாற்றை நான் மறுகண்ணோட்டம் இடுவோமாக. ஆபிரகாம் எழுபத்தைந்து வயதுடையவராக ஆரானில் இருந்தபோது (ஆதியாகமம் 12:4), அவரிடம் தேவன், ''நான் உன்னைப் பெரிய ஜாதியாக்[குவேன்]'' என்று கூறியிருந்தார் (12:2அ). அவர் கானான் நாட்டிற்குச்சென்று சேர்ந்தபோது, அவரிடம் கர்த்தர், "உன் சந்ததிக்கு இந்தச் தேசத்தைக் கொடுப்பேன்'' என்று கூறினார் (12:7அ). இந்த வாக்குத்தத்தங்கள், ஆபிரகாமும் அவரது மனைவி சாராளும் குறைந்தபட்சம் ஒரு பிள்ளையையாவது பெறுவார்கள் என்று முன்அனுமானித்தன. இருப்பினும், ஆண்டுகள் கடந்துசென்றன, ஆபிரகாமும் சாராளும் பிள்ளையற்றவர்களாகவே இருந்தனர். ஒருகூற்றின்படி, ''அவர்கள் இன்னும் இளமையாகிக்கொண்டிருக்கவில்லை.'' ஆபிரகாம், தேவனுடைய வாக்குத்தத்தம் எவ்வாறு செயல்படுத்தப்படும் என்று வியப்படையத்தொடங்கினார் (15:2, 3ஐக் காணவும்).[14]

ஆபிரகாமுக்கு ஏறக்குறைய எண்பத்தி ஐந்து வயதானபோது (ஆதியாகமம் 16:16ஐக் காணவும்), அவருக்குத் தேவன் கூடுதலான உறுதிப்பாட்டைக் கொடுத்தார். ஒரு இரவில் தேவன், ஆபிரகாமை விண்மீன்களின் கீழ் நடைபோட அழைத்துச்சென்றார். ஆபிரகாமிடத்தில் தேவன், "நீ வானத்தை அண்ணாந்துபார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு''

என்று கூறினார் (15:5அ). அவர் ஆபிரகாமுக்குப் பின்வரும் உத்தரவாதத்தைக் கொடுத்தார்: "உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும்" (15:5ஆ). மனிதக் கண்ணோக்கில் இருந்து பார்க்கையில், இது நிறைவேற்றப்படச் சாத்தியமற்ற ஒரு வாக்குத்தத்தமாக இருப்பதாகத் தோன்றியது. அந்த இடர்ப்பாடான கணத்தில், ஆபிரகாம் "கர்த்தரை விசுவாசித்தான்; அதை அவர் [கர்த்தர்] அவனுக்கு நீதியாக எண்ணினார்" (15:6).

ஆதியாகமம் 15:6ஐப் பற்றிய இரு உண்மைகளை நான் புரிந்துகொள்ளுதல் அவசியமாக உள்ளது. முதலாவது, நாம் இது ஆபிரகாம் கர்த்தரில் விசுவாசம் கொண்ட முதன்முறையாக இருந்தது என்று நினைக்கக்கூடாது. பல ஆண்டுகளுக்கு முன்னர், கல்தேயரின் ஊர் என்ற நகரத்தில் தேவன் ஆபிரகாமுக்குத் தரிசனமாகி[15] (நடபடிகள் 7:2; ஆதியாகமம் 15:7; நெகேமியா 9:7ஐக் காணவும்), "நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்கு வா" என்றார் (நடபடிகள் 7:3). ஆரானில், அவருக்குத் தேவன் மறுபடியும் தரிசனமாகி, அதே அறிவுறுத்துதல்களைத் திரும்பக் கொடுத்தார் (ஆதியாகமம் 12:1; வசனம் 4ஐக் காணவும்). எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான்" என்று கூறினார் (எபிரெயர் 11:8). அதே எழுத்தாளர் தொடர்ந்து, "*விசுவாசத்தினாலே* அவன் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலே பரதேசியைப்போலச் சஞ்சரித்து" என்று கூறினார் (வசனம் 9அ). ஆபிரகாமுடைய வாழ்வு முழுவதுமே அவர் தேவன்மீது கொண்டிருந்த விசுவாசத்தின் அடிப்படையிலேயே அமைந்திருந்தது. ரோமர் 1ல், பவுலின் வார்த்தைகளைக் கடனாகப்பெறுவதென்றால், இந்த முற்பிதாவினுடைய வாழ்வு, "தொடக்க முதல் இறுதி வரை விசுவாசத்தினாலேயே" அமைந்திருந்தது (வசனம் 17). இவ்வாறு ஆதியாகமம் 15:6, ஆபிரகாமின் விசுவாசத்தினுடைய தொடக்கத்திற்குக் குறிப்பாயிருக்கவில்லை.

இரண்டாவது, ஆதியாகமம் 15:6, ஆபிரகாம் நீதிமானாக்கப்பட்டதின் *தொடக்கத்தைப்* பற்றிப் பேசுகிறது - அதாவது, (சிலர் கூறுகிறபடி) அவர் "இரட்சிக்கப்பட்ட" இடம் - என்று நாம் நினைக்கக்கூடாது. ஆபிரகாமைத் தேவன் தமது பிள்ளையென்று கருதியிராவிட்டால், அவர் முன்னதாகவே அவ்வளவு ஆச்சரியமான வாக்குத்தத்தங்களை நிச்சயமாகக் கொடுத்திருக்க மாட்டார். ஆபிரகாம் மெல்கிசேதேக்கைச் சந்தித்தபோது, அந்த அரசர், "வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிராமுக்கு உண்டாவதாக" என்று கூறினார் (ஆதியாகமம் 14:19). இதற்குச் சற்றுப்பின்பு, தேவன்தாமே ஆபிரகாமிடம், "ஆபிராமே, நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன்" என்று கூறினார் (15:1). ஆதியாகமம் 15:6க்கு முன்பாகவே ஆபிரகாம் நீதிமானாக்கப்பட்டிருந்தார் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

இந்த விஷயங்கள் உண்மையாக இருக்கும் பட்சத்தில், ஆபிரகாம் விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்பட்டதை நிரூபிக்கப் பவுல் ஆதியாகமம் 15:6ஐ ஏன் பயன்படுத்தினார்? இங்கு நான்கு காரணங்கள் உள்ளன:

(1) ஏவுதல்பெற்ற எழுத்தாளர்கள், ஆதியாகமம் 15:6க்கு முன்னரே இருந்த

ஆபிரகாமின் விசுவாசம் பற்றிப் பின்பு பேசினாலும், ஆபிரகாம் விசுவாசித்தார் என்று வேதாகமத்தில் இவ்விடத்தில்தான் முதன்முறையாகக் கூறப்படுகிறது. (உண்மையில், "நம்புதல்," "நம்பிக்கை," அல்லது "விசுவாசம்" என்ற வார்த்தையை யாரேனும் ஒருவரைப்பற்றி வேதாகமம் இங்குதான் முதன்முறையாகப் பயன்படுத்துகிறது.[16])

(2) ஆபிரகாம் இந்த வேளைக்கு முன்பாகவே நீதிமானாக/நீதிமானாக்கப்பட்டு இருந்தார் என்பது தெளிவு என்றாலும், அவரைக்குறிப்பிட "நீதிமான்" என்ற வார்த்தையை வேதாகமம் இங்குதான் முதன்முறையாகப் பயன்படுத்துகிறது.

(3) ஆபிரகாம் தமது *விசுவாசத்தின்* அடிப்படையில் நீதிமானாக்கப்பட்டார் என்று இவ்வசனம் குறிப்பாக எடுத்துரைக்கிறது.

(4) நாள்வரிசை முறைமைப்படி, இந்தக்கூற்று, ஆபிரகாம் விருத்தசேதனம் செய்யப்படுவதற்கு பதினான்கு ஆண்டுகளுக்கு முன்பு (ஆதியாகமம் 16:1, 16; 17:1, 9, 24 ஆகியவற்றைக் காணவும்) மற்றும் மோசே நியாயப்பிரமாணத்தைக் கொடுப்பதற்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகள் முன்பு (கலாத்தியர் 3:16, 17ஐக் காணவும்) ஏற்படுத்தப்பட்டிருந்தது.

ஆதியாகமம் 15:6 ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தைப்பற்றி எழுதப்பட்டிருந்தது என்றாலும், *ஏவுதல் பெற்ற எழுத்தாளர்கள், இதை ஆபிரகாமின் வாழ்வுபற்றி ஏற்புடைய ஒரு தொகுப்புரையாகவே கண்டனர்.* கலாத்தியர் 3:6-9ல், பவுல் இவ்வசனத்தை ஆதியாகமம் 12ல் ஆபிரகாமுக்கு முன்னரே கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்துடன் பிணைத்தார். ரோமர் 4ன் பிற்பகுதியில், நட்சத்திரக்கூட்டம் தெரிந்த அந்த இரவில் ஆபிரகாம் தேவனுடன் சஞ்சரித்துக்கொண்டிருந்த அவ்வேளைக்குப் பதினான்கு ஆண்டுகள் பின்பு, அவருக்கு ஒரு மகன் தரப்படுவார் என்று அளிக்கப்பட்ட வாக்குத்தத்தத்துடன் தொடர்புடையவகையில் பவுல் ஆதியாகமம் 15:6ஐப் பயன்படுத்தினார் (ரோமர் 4:18-22). யாக்கோபு 2:21-24ல், யாக்கோபு ஆதியாகமம் 15:6ஐ, ஆபிரகாம் தமது மகனைப் பலிபீடத்தின்மீது அளித்த நிகழ்ச்சியுடன் பிணைத்தார்.

ரோமர் 4ல், ஆதியாகமம் 15:6ஐப் பயன்படுத்துவதைப் பவுல் தேர்ந்துகொண்டதற்கு, மேலே பட்டியலிடப்பட்டுள்ளவற்றில் மூன்றாவதானது முக்கியகாரணமாக இருக்கிறது. இவ்வசனம், ஆபிரகாம் தம்முடைய விசுவாசத்தின் அடிப்படையிலேயே நீதிமானாக்கப்பட்டார் என்று குறிப்பாக எடுத்துரைக்கிறது - *மற்றும் இது கிரியைகளைப் பற்றி ஒன்றும் கூறவே இல்லை.* சில யூதத்துவப் போதகர்கள், *ஆபிரகாம் தமது கிரியைகளின் அடிப்படையில் நீதிமானாக்கப்பட்டிருந்தார்* என்ற தங்களுடைய போதனைக்குப் பொருந்தும்வகையில் ஆதியாகமம் 15:6ஐப் பயன்படுத்த முயற்சிசெய்துள்ளனர். அவர்கள் இவ்வசனத்தை, "ஆபிரகாம் தேவனிடத்தில் *விசுவாசம்* நிறைந்தவராயிருந்தார், அது அவருக்கு நீதியாக எண்ணப்பட்டது" என்று கூறும்படி மாற்றியமைக்கின்றனர் - ஆனால் இவ்வசனம் அவ்வாறு கூறுவதில்லை. இது, "அவன் கர்த்தரை *விசுவாசித்தான்,* அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்" என்று கூறுகிறது.

ஆபிரகாம் தமது காலத்தில் வாழ்ந்த மக்கள் யாவரிலும் மிகச்சிறந்தவராக இருந்தபடியால் அவரைத் தேவன் தேர்ந்துகொண்டார் என்று யூதர்கள் வலியுறுத்தினர் - இதற்கு நான் கருத்து வேறுபடுவதில்லை. அவர்கள், உண்மையான

தேவனுடைய வெளிச்சத்தில் ஆபிரகாம் நடந்தார், அதேவேளையில் எஞ்சிய உலகம் புறதெய்வ வணக்கம் என்ற இருளில் தடுமாறிற்று என்று குறிப்பிட்டனர் - இது உண்மையாக இருக்கிறது. தேவனுக்குக் கீழ்ப்படிதல் என்பது மனிதப்பகுத்தறிவிற்கு எதிரானதாக இருந்த வேளையிலும், அவருக்கு கீழ்ப்படிதல் என்பதற்கு உதாரண மாக அவரை அவர்கள் பற்றி உயர்த்தினர் - அவ்வாறு செய்ததில், அவர்கள் சரியானவர்களாகவே இருந்தனர். இவைகள் எல்லாவற்றிலுமே, அவர்கள் சரியானவர்களாய் இருந்தனர். ஆபிரகாம் மனித நற்தன்மையின் அடிப்படையில் *நீதிமானாக்கப்பட்டார்* என்று கூறியபோதுதான் அவர்கள் தவறாகச் சென்றனர். விஷயம் *அதுவல்ல* என்று பவுல் அறிவித்தார். மாறாக, "ஆபிரகாம் தேவனை விசுவாசித்தார், அது அவருக்கு நீதியாக எண்ணப்பட்டது."

## "அது அவருக்கு [நீதியாக] எண்ணப்பட்டது" (4:3, 5)

**ஆச்சரியமான சத்தியம் ஒன்று அறிவிக்கப்பட்டது**

அது நம்மை, ஆபிரகாமுக்கு - மற்றும் நமக்கு - "தேவனுடைய கணக்கிடும் ஏற்பாட்டிடம்" கொண்டு வருகிறது. இன்றைய நாட்களில், நான் வாழும் இடத்தில், கணக்கிடுதலில் பெரும்பான்மையும் கணணிகளில் செய்யப்படுகிறது; ஆனால் நான் ஒரு பையனாக இருந்தகாலத்தில், பேரேடு என்று அழைக்கப்படுகிற புத்தகங்களில் கணக்கிடுதல் செய்யப்பட்டது. வர்த்தக உரிமையாளர்கள் இந்தப் பேரேடுகளை "புத்தகங்கள்" என்று குறிப்பிட்டனர். "புத்தகங்களில் தகவல்களை பதிந்துவைத்தல்," "புத்தகங்களைப் பராமரித்தல்" அல்லது "புத்தகப்பணி" என்று அழைக்கப்பட்டது. பேரேட்டில், செலவுகளுக்கு (வெளிச்செல்லும் பணம்) "பற்று" என்ற பத்தியும், வரவுகளுக்கு (உள்வரும் பணம்) "வரவு" என்ற பத்தியும் இருந்தன. இவ்விரு பத்திகளிலும் உள்ள தொகை சமமாயிருக்கும்படி செய்தல் ("புத்தகத்தை நேர்ப்படுத்துதல்") புத்தகப் பராமரிப்பாளர்களின் பொறுப்புகளில் ஒன்றாக இருந்தது.

நான் அபிலேன் கிறிஸ்தவக் கல்லூரியில் (இப்போது பல்கலைக் கழகம்) ரோமருக்கு எழுதிய நிருபம் பற்றிய J. D. தாமஸ் அவர்களின் வகுப்பில் படித்தேன் என்பதை நான் முன்னரே குறிப்பிட்டிருந்தேன்.[17] ரோமர் 4ஐ சகோதரர் தாமஸ் கலந்துரையாடுகையில், அவர் கரும்பலகையின் பக்கம் திரும்பினார். அவர் ஒரு பெரிய செவ்வகத்தை வரைந்து, அதன் உச்சியில் "தேவனுடைய பேரேடு" என்றெழுதினார். பின்பு அவர் [அச்செவ்வகத்தினுள்] இடது புறத்தில் "பற்று" என்று ஒரு பத்தியையும் வலது புறத்தில் "வரவு" என்ற ஒரு பத்தியையும் உருவாக்கினார். "பற்று" என்ற பத்தியில், அவர் "**பாவம்**" என்ற வார்த்தையை எழுதி, ஆபிரகாமின் வாழ்வில் பாவம் என்பது பற்றிப் பேசுகையில் அதில் X குறிகளை இடத்தொடங்கினார்.

ஆபிரகாம் நல்லவராக இருந்தார், ஆயினும் அவர் இன்னமும் பாவம் செய்தார். பல யூதர்கள் ஆபிரகாமின் பாவங்களைக் காணாது விடுகின்றனர் (அல்லது அதற்குச் சாக்குப்போக்கு கூறுகின்றனர்), ஆனால் அவரது வாழ்வைப்பற்றிய மேலோட்டமான படிப்புக்கூட பூரணமற்றதன்மைகளை வெளிப்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக, பயத்தின் காரணமாக, ஆபிரகாம் இருமுறை சாராளைப்பற்றி அரசர்களிடத்தில் "விட்டுவிடுதல் என்ற விஷயத்தினால் பொய் கூறினார்" (ஆதியாகமம் 12:10-20; 20:1-18).

*ஆகார் கடுமையாக நடத்தப்பட அனுமதித்ததில் ஆபிரகாம் தவறானவராக இருந்தார் என்று பலர் நினைக்கின்றனர் (ஆதியாகமம் 16:6-14). பிந்திய ஒரு பாடத்தில் நாம் காணப்போகிறபடி, ஆபிரகாமின் விசுவாசம்கூட பூரணத் திற்குக் குறைவானதாகவே இருந்தது. வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், ஆபிரகாம் மனிதராக இருந்தார் மற்றும் எல்லா மனிதர்களையும்போன்றே அவரும் போராடினார்.*

*இந்த வேளையில், சகோதரர் தாமஸ், ஆபிரகாமின் பேரேட்டில் "பற்று" என்ற பக்கத்தில் பாவங்களை ("X" களை) "கூட்டியிருந்தார்." பின்பு அவர் "வரவு" என்ற பத்தியின் பக்கம் திரும்பினார். "ஆபிரகாம் நல்ல செயல்களையும் செய்திருந்தார், அவற்றைப்பற்றித் தேவன் அறிந்திருந்தார்" என்று அவர் கூறினார். அந்தப்பத்தியில் அவர் இரண்டு "X" களை இட்டார். இருப்பினும், அவர் ஆபிரகாமின் வாழ்க்கையில் இருந்த எந்த அளவு நற்செயலும் அவர் செய்திருந்த பாவங்களை "சாமானப்படுத்த" இயலாது என்று வலியுறுத்தினார். "சூழ்நிலையானது நம்பிக்கையற்றதாக காணப்பட்டது" என்று அவர் கூறினார்.*

*பின்பு சகோதரர் தாமஸ், logizomai என்பதன் அர்த்தத்தை எங்களுக்கு நினைவூட்டினார். பலகையில் "**விசுவாசம்**" என்ற வார்த்தையைக் கூட்டிய அவர், "தேவன் வரவு பத்தியில் '**விசுவாசம்**' என்பதை எழுதி, ஆபிரகாம் அதை மாத்திரம் கொண்டிருந்தால் போதும் என்பது போன்று, அதை நீதியாக* எண்ணினார்.*" பின்பு "புத்தகங்கள் நேராக்கப்படும்படி" அவர் "வரவு" பத்தியின் அடிப்பகுதியில் "X" ஐக் கூட்டினார்.*

| தேவனுடைய பேரேடு | | | |
|---|---|---|---|
| ***கடன்*** | | ***பற்று*** | |
| ***பாவம்*** | X X<br>X X<br>X X | ***விசுவாசம்*** | X X<br>X X<br>X X |
| X X X X X X X X X X X | | X X X X X X X X X X X | |

*சகோதரர் தாமஸ் தமது வரைபடத்தில் இருந்த குறைபாட்டிற்கு வருத்தம் தெரிவித்தார்; எந்த ஒரு விவரிப்பும் பூரணப்பட்டதல்ல. "ஆனால், ஆபிரகாமிடம் பூரணமான கீழ்ப்படிதலை தேவன் எதிர்பார்க்கவில்லை. (அவர் [ஆபிரகாம்] அதைக் கொண்டிருக்கவும் இல்லை), ஆனால்," "அவரது* விசுவாசத்தையே *கண்ணோக்கினார். அவர் ஆபிரகாமின் விசுவாசத்தைக் கண்டபோது, 'அது அவருக்கு நீதியாக எண்ணப்பட்டது.' அவர்* விசுவாசத்தை *நீதியாக எண்ணினார்" என்று அவர் கூறினார். சற்றே நிதானித்தபின்பு அவர், "அதே அடிப்படையில்தான் அவர் உங்களையும் என்னையும் இரட்சிக்கிறார்" என்று கூடுதலாகக் கூறினார்.*

*இந்த சத்தியத்தை முதன்முறையாகக் கேள்விப்படும்போது மக்கள், நிம்மதிப்பெருமூச்சு விடுவதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்கள் தேவனுடைய நீதியை மாத்திரம் அறிந்தவர்களாக "பரலோகம் செல்லப் போதுமானவற்றைச் செய்தல்" பற்றி பயம்நிறைந்தவர்களாக இருந்தனர் என்பது தெளிவு. சகோதரர் தாமஸின் வகுப்பில் இவ்வகையான பதில்செயல் எதுவும்*

செய்யப்பட்டதாக எனக்கு நினைவில் இல்லை. கர்த்தரைப் பிரியப்படுத்த "போதுமானதைச் செய்தல்" பற்றி முன்பு கவலை கொண்டிருந்ததாக எதையும் நான் நினைவுகொள்ளவில்லை. "பூரணத்துவ இயலின் சாபம்" என்று யாரோ ஒருவர் அழைத்துள்ள விஷயத்தினால் ஒருவர் துன்புறுகையில், நான் இருக்க வேண்டியபிரகாரம் இருந்ததில்லை என்பதை அறிந்திருந்தேன். இருந்த போதிலும், எனது பெற்றோரும் மற்றவர்களும் எனக்கு, அன்பின் தேவனைப் பற்றிப் போதித்திருந்தனர். (நான் ரோமருக்கு எழுதிய நிருபத்தைப் பற்றிப் படிக்கும் வகுப்பில் இருந்தபோது, நான் பலவிஷயங்களை அறியாதிருந்தது மட்டுமின்றி, இளைஞனாகவும் உற்சாகம் மிகுந்தவனாகவும், எனது கர்த்தருக்காக மாபெரும் செயல்களைச் செய்யத் தயாராகவும்கூட இருந்தேன் என்பதை நான் ஒப்புக்கொள்ள வேண்டும். நான் ஏன் கவலைப்பட வேண்டும்?)

சகோதரர் தாமஸ் தமது வரைபடத்தை வரைந்தபோது, நான் உணர்ந்ததாக நினைவுபடுத்திக்கொள்ளும் விஷயம், புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்ளுதல் மற்றும் கூடுதல் அறிவுக்கூர்மையை ஆதாயப்படுத்திக் கொள்ளுதல் என்ற வகையில் ஆர்வத்திற்குரியதாக, உணர்வெழுச்சியின் தொடுதல் கொண்டதாக இருந்தது. ஒருவேளை நான் சற்றே சந்தேகம் உடையவனாகவும் இருந்தேன். எனது மனம் தகவல்களை ஆராய்ந்து பார்த்து, வசனத்தைப் பற்றி நான் முன்பு கற்றிருந்தவற்றிற்கு எதிராக அதைப் பரிசோதனை செய்தது (நடபடிகள் 17:11). படிப்படியாக, ரோமர் 4ல் பவுலின் போதனையின் தனிச்சிறப்பில் மூழ்கலாயிற்று. தொடர்ந்து வந்த ஆண்டுகளில், இந்த மாபெரும் அதிகாரம் பற்றிய எனது மதிப்பு தொடர்ந்து வளர்ந்துள்ளது.

நான் பட்டம்பெற்று முழுநேரம் பிரசங்கிக்கத் தொடங்கியபோது, கிறிஸ்துவுக்குள்ளான எனது சகோதரர் சகோதரிகள் பலருக்கு ரோமர் 4ன் சத்தியங்கள் தேவையாயிருந்தன என்பது விரைவிலேயே தெளிவாயிற்று. ஒரு உறுப்பினர், "நீங்கள் பரலோகம் செல்லப் போதுமானவற்றைச் செய் திருக்கும் வேளை பற்றி எவ்வாறு அறிவீர்கள்?" என்று கேட்பது அசாரணமான தாக இருந்ததில்லை. "நீங்கள் இரட்சிக்கப்பட்டு இருக்கிறீர்களா?" என்ற கேள்விக்கு, "நான் அவ்வாறே நம்புகிறேன்" என்ற நிச்சயமற்ற வாக்கியமே பொதுவான பதிலாயிருந்தது. வேதாகம வகுப்பின் போதகர்களில் சிலர், யோவானின் "துடுக்குத்தனமான" கூற்றுடன் போராடுகின்றனர்: "உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும் ... இவைகளை எழுதி யிருக்கிறேன்" (1 யோவான் 5:13). அவர்கள் பவுல் இவ்வளவு தைரியமாய் இருக்க முடிந்தது பற்றி வியப்படைந்தனர்: "இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்" (2 தீமோத்தேயு 4:8அ).

பவுலின் போதனை எனக்குத் தனிப்பட்டவகையில் எவ்வளவு முக்கியத்துவம் உள்ளதாகிறது என்பதையும் நான் படிப்படியாக அறிந்திருக்கிறேன். எனது தேவனுக்கு முன்பாக எனது செயல்கள் எவ்வாறு குறைவுள்ளவையாக உள்ளன என்பதைப் பற்றி நான் அதிகம் அதிகம் உணர்வுள்ளவனாக வளருகிறேன். மற்றும், காலம் கடந்து செல்லுகையில், ஒருகாலத்தில் நான் சக்தியின் வற்றாத ஆதாரமூலமென்று நினைத்த விஷயம் மறைந்தொழிந்துள்ளது. நாளுக்குநாள், நான் தேவன் எனது பூரணமற்ற, போதுமானதற்ற, எப்போதுமே தவறுள்ள செயல்களைப் பார்ப்பதில்லை - ஆனால் எனது *விசுவாசத்தையே* அவர்

*பார்க்கிறார் என்ற உண்மையை அதிகம் அதிகமாக மதிக்கிறேன். தேவனுக்கு நன்றி!*

**ஆழ்ந்தறியப்பட்ட ஒரு தீவிரமான கேள்வி**

இது கிரியைகள் தேவையில்லை என்று அர்த்தப்படுகிறதா? பவுல் ஆதியாகமம் 15:6ஐ மேற்கோள் காட்டியபோது, அவர் ஆபிரகாமின் கிரியைகள் முக்கிய மற்றவையாக இருந்தன என்று போதிக்க நோக்கம் கொண்டிருந்தாரா? இல்லவே இல்லை. சற்று நேரத்திற்கு முன்பு, நான் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் ஆதியாகமம் 15:6ஐ ஆபிரகாமுடைய வாழ்வின் தொகுப்புரையாகக் கருதினர் என்று குறிப்பிட்டேன். அவர்கள் பயன்படுத்திய உதாரணங்களைப் பாருங்கள். கலாத்தியர் 3:6-9ல், பவுல் இவ்வசனத்தை ஆதியாகமம் 12ல் உள்ள தேவனுடைய வசனத்துடன் பிணைத்தார், அங்கு தேவன் ஆபிரகாமைக் கானானுக்குச் செல் லும்படி திரும்பவும் அழைத்தார். அந்த அழைப்பைப் பற்றி, எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், ''விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தர மாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனான்'' என்று கூறினார் (எபிரெயர் 11:8). ஆபிரகாம் *கீழ்ப்படியாமல் இருந்திருந்தால்* என்ன ஆகியிருக்கும்? அது அவர் விசுவாசி*க்கவில்லை* என்று அர்த்தமாகியிருக்காதா?

ரோமருக்கு எழுதிய நிருபத்தில் பவுல் இவ்வசனத்தின் தோற்றக்காலச் சந்தர்ப்பப்பொருளைத் தம் சிந்தையில் முதன்மையாகக் கொண்டிருந்தார் (4:10ஐக் காணவும்), ஆனால் அவர் பதினான்கு ஆண்டுகளுக்குப் பின்பு ஒரு மகன் பிறப்பான் என்ற குறிப்பான வாக்குத்தத்தத்தையும் உள்ளடக்கினார் (4:19ஐக் காணவும்). ஆபிரகாம் ஒரு மகனைப் பெறுவார் என்ற உத்தரவாதம் அளிக்கப்பட்டது - ஆனால் கடைசியில் ஈசாக்கு பிறந்தபோது, அது கன்னிப்பெண்ணிடத்தில் இருந்து பிறந்த பிறப்பாக இருக்கவில்லை. ஆபிரகாம் “தேவன்மீது விசுவாசம்'' மாத்திரம் கொண்டவராக, அந்த வாக்குத்தத்தம் நிறைவேற்றப்படும் வகையில் சாராளுடன் திருமண உறவுகொள்ள மறுத்திருந் தால் என்னவாகியிருக்கும்? மீண்டுமாக, அவ்வகையான செயல்பாடு (அல்லது செயலற்றதன்மை) விசுவாசத்தையல்ல, அவிசுவாசத்தையே செயல்விளக்கப்படுத்தியிருக்கும்.

பல ஆண்டுகளுக்குப் பின்பு, தேவன் ஆபிரகாமுடைய மகன் ஈசாக்கைத் தமக்குப் பலியிடும்படி அறிவுறுத்திய நிகழ்ச்சி, யாக்கோபு பயன்படுத்திய உதாரணமாக இருந்தது.[18] பின்வருமாறு யாக்கோபு எழுதினார்,

> நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலி பீடத்தின்மேல் செலுத்தினபோது, கிரியைகளினாலே அல்லவோ நீதி மானாக்கப்பட்டான்? விசுவாசம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சிசெய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே. “அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது” (யாக்கோபு 2:21-23அ).

அந்த நிகழ்ச்சியைப்பற்றி, எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் பின்வரு

*மாறு எழுதினார்,*

> *மேலும் விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சோதிக்கப்பட்டபோது ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்தான். "ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் என்று அவனோடே சொல்லப்பட்டிருந்ததே"; இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்களைப் பெற்றவன், மரித்தோரிலிருந்துமெழுப்ப தேவன் வல்லவராயிருக்கிறாரென்றெண்ணி, தனக்கு ஒரேபேறானவனையே பலியாக ஒப்புக்கொடுத்தான்; மரித்தோரிலிருந்து அவனை பாவனையாகத் திரும்பவும் பெற்றுக்கொண்டான் (எபிரெயர் 11:17-19).*

*ஆபிரகாம் தமது மகனைப் பலியிடவேண்டும் என்ற கட்டளையைத் தேவன் கொடுத்தபோது, அவர் (ஆபிரகாம்) அதை மறுத்திருந்தால் என்னவாகியிருக்கும்? அப்படிப்பட்ட முடிவானது, "மரித்தோரிலிருந்துமெழுப்ப வல்லவராயிருக்கிற" தேவன்மீது கொண்டுள்ள மறைமுகமான நம்பிக்கைக்குப் பதிலாக விசுவாசக்குறைவை வெளிப்படுத்தியிருக்கும் என்பது தெளிவல்லவா?*

*ஆபிரகாமுடைய கிரியைகளின் முக்கியத்துவம், ஆதியாகமம் 26ல் ஈசாக்குக்குத் தேவனுடைய வார்த்தைகளில் காணப்படுகிறது:*

> *"... உன் தகப்பனாகிய ஆபிரகாமுக்கு நான் இட்ட ஆணையை நிறைவேற்றுவேன். ஆபிரகாம் என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து, என் விதி களையும், என் கற்பனைகளையும், என் நியமங்களையும், என் பிரமாணங் களையும் கைக்கொண்டபடியினால், நான் உன் சந்ததியை வானத்தின் நட்சத்திரங்களைப்போலப் பெருகப்பண்ணி, உன் சந்ததிக்கு இந்தத் தேசங்கள் யாவையும் தருவேன்; உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதி களும் ஆசீர்வதிக்கப்படும்" (வசனங்கள் 3-5).*

*ஆம், ஆபிரகாமின் கிரியைகள் முக்கியமானவைகளாக இருந்தன. ஆபிரகாம் வாழ்ந்த காலம் மற்றும் அவர் எந்த சூழ்நிலைகளின்கீழ் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தார் என்பதை ஒருவர் ஆழ்ந்து சிந்திக்கும்போது, அவர் முழு இருதயத்துடன் கர்த்தருடைய கட்டளைகளுக்குப் பதில்செயல்செய்தது என்பது திகைப்புக்குரியதாகவும், அதிர்ச்சியளிப்பதாகவும்கூட இருக்கிறது. இருப்பினும், பின்வரும் இரு திறவுகோல் உண்மைகளின் பார்வையை மறக்கவேண்டாம்: (1) ஆபிரகாமின் கிரியைகளைப் பற்றி நாம் பேசுகையில், நாம் "தகுதிப்படுத்தும் கிரியைகள்" பற்றியல்ல, ஆனால் "விசுவாசத்துடன் கீழ்ப்படிதல்" பற்றியே பேசுகிறோம். (2) ஆபிரகாமின் கிரியைகள் குறிப்பிடத்தக்கவைகளாக இருந்தபோதிலும், அவை பூரணப்பட்டவைகளாக இருந்ததில்லை. அவர் இன்னமும் "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு" இரட்சிக்கப்பட வேண்டியவராக இருந்தார் (எபேசியர் 2:8ஐஅவைக் காணவும்). இவ்வாறு வேதவசனங்கள், "ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது" என்று வலியுறுத்தின (ரோமர் 4:3).*

### ஆச்சரியமான சத்தியம் சொந்தமாக்கப்பட்டது

*ஆபிரகாம் மாத்திரம் தமது விசுவாசத்தின் அடிப்படையில் இரட்சிக்கப் படவில்லை, ஆனால் நீங்களும் நானும்கூட அதே அடிப்படையில்தான்*

இரட்சிக்கப்படுகிறோம் என்பதைப் பின்வரும் பாடங்களில் நாம் காண்போம். நாம் "தேவனுடைய திகைப்புக்குரிய 'கணக்கிடும் ஏற்பாடு' " என்பதில் இருந்தும் பயனடைகிறோம் (4:5ஐக் காணவும்). பவுல், "அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டதென்பது, அவனுக்காக [ஆபிரகாமுக்காக] மாத்திரமல்ல, நமக்காகவும் எழுதப்பட்டிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவரை விசுவாசிக்கிற நமக்கும் அப்படியே எண்ணப்படும்" என்று எழுதினார் (4:23, 24). இந்த சத்தியத்தை நாம் புரிந்துகொண்டவுடன், இது நமது வாழ்வில் பிரதானமான செயல்தாக்கம் கொண்டிருக்க வேண்டும்.

(1) *இது நம்மை நம்பிக்கையால் நிரப்ப வேண்டும்.* ஒப்புக்கொடுத்தல் அற்ற மற்றும் அரைமனது கொண்ட கிறிஸ்தவர்கள், கர்த்தருக்கு "போதுமான வற்றைச் செய்தல்" பற்றிக் கவலைப்படுவதில்லை. இதற்கு நேர்மாறாக, மனச்சாட்சியின் உணர்வுகொண்ட ஒவ்வொரு கிறிஸ்தவரும் தமது தகுதி யின்மை என்பதை உணர்ந்து, தாம் இருக்கவேண்டிய முறையில் இருந்து எவ்வளவு குறைவுபட்டுள்ளார் என்பதைப் புரிந்துகொள்கிறார். தேவன் கீழ்ப்படிதலைக் கேட்கிறபோது, அவர் *பூரணமான* கீழ்ப்படிதலைக் கேட்ப தில்லை என்பது ஆச்சரியமானதாக இருப்பதில்லையா? அவர் நம்மிடத்தில், நாம் நம்மால் இயன்ற அளவுக்கு மிகச்சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார், ஆனால் கீழ்ப்படிதலுக்குப்பின்னால் உள்ள நமது நோக்கம்தான் - அதாவது நமது *விசுவாசம்*தான் - அவரது மாபெரும் அக்கறைக்குரியதாக உள்ளது. வில்லியம் பார்க்ளே என்பவர், "தேவன் நமக்கு அளித்துள்ள அன்பை பூரண மான நம்பிக்கையுடன் ஏற்றுக்கொள்ளுதல்" என்பதைக் கற்றுக்கொள்வது அவசியமானதாக இருக்கையில், "தேவனுடைய அன்பை ஈட்டுவதற்காக" சிலர் போராடி "போராட்டத்தில் தோல்வியடைதல்" பற்றி எழுதினார்.[19]

(2) *இது நமக்குள் அன்பை உட்செலுத்த வேண்டும்.* நம்மீது அதிகமாய் அன்புகூருபவர்மீது நாம் அன்பு செலுத்தாது இருப்பது எப்படி (1 யோவான் 4:19)? நாம் "விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டு" இருக்கிறோம் என்பதைப் புரிந்துகொண்டவுடன் "தேவன் நமக்குச் செய்துள்ளது பற்றி திகைப்புணர்வினால் மூழ்கடிக்கப்பட்டு, [நமது] ஆராதனையில் அந்தத் திகைப்புணர்வு வெளிச்சிந்துகிறது."[20] ஆராதனை என்பது நிறைவேற்றப்பட வேண்டிய கடமையாக இனியும் இராது, ஆனால் அது மகிழ்வுடன் அனுபவிக்கப்பட வேண்டிய ஒரு சிலாக்கியமாக இருக்கும். "ஆச்சரியமான கிருபை" என்பது போன்ற பாடல்கள் ஒரு புதிய அர்த்தத்தைக் கொடுப்பவைகளாயிருக்கும்!

(3) *இது நம்மைச் செயல்படும்படி அசைக்க வேண்டும்.* சிலர், "விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்" பற்றி நாம் போதித்தால், மக்கள் கிரியை செய்ய வேண்டிய அவசியமில்லை, கீழ்ப்படிய வேண்டிய அவசியம் இல்லை என்று முடிவுசெய்துவிடுவார்கள் என்பதாகக் கவலைப்படுகின்றனர். நமது அடுத்தபாடத்தில் நாம் காணப்போகிறபடி, "விசுவாசத்தினால் நீதிமா னாக்கப்படுதல்" என்ற உபதேசம் - தக்கவகையில் புரிந்துகொள்ளப்படும்போது - குறைவானதல்ல, ஆனால் *மாபெரும்* முயற்சியை விளைவிக்கிறது. கிறிஸ்து எனக்காக தமது எல்லாவற்றையும் கொடுத்தார்; நான் என்னுடைய எல்லா வற்றையும் அர்ப்பணிக்காது எவ்வாறு இருக்க முடியும்?

## *முடிவுரை*

*தேவனுடைய "கணக்கிடும் ஏற்பாடு" உண்மையிலேயே திகைப்புக்கு உரியதாக இருப்பதில்லையா? நீங்கள் அவ்வாறே நினைக்கிறீர்கள் என்று நான் நம்புகிறேன். தொடர்ந்து வரும் பாடத்தில் நாம் இதைப் பற்றித் தொடர்ந்து கலந்துரையாடுவோம்.*

*ரோமர் 4ல் பவுலின் போதனை, பல ஆண்டுகளுக்கு முன்பு சகோதரர் தாமஸ் அவர்களின் வகுப்பில் எனக்குப் புதியதாகத் தோன்றியதுபோல, உங்களுக்குப் புதியதாகத் தோன்றுதல் சாத்தியமா? இதை நீங்கள் உடனடியாக முழுமையும் புரிந்துகொள்ளாவிட்டால், கவலைப்படாதீர்கள். இந்தவரிசைத் தொடரின் முதல் பாடத்தில், ரோமருக்கு எழுதிய நிருபம் கி.பி. 57 அல்லது 58ல் எழுதப்பட்டது என்று நான் கருத்துத் தெரிவித்திருந்தேன். அது இந்த நிருபத்தை, சபை நிலைநாட்டப்பட்டு முப்பது அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகளுக்குப் பின்பு எழுதப்பட்டது என்பதாகும். பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தைப் படிக்காமலேயே கிறிஸ்தவர்களாகி மரித்தவர்களின் நிலையைப் பற்றி நினைத்துப்பாருங்கள். நீங்கள் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கும்படி காத்துக்கொள்வதற்கு உங்களை ஊக்குவிக்கக்கூடிய சத்தியங்களைப் பகிர்ந்துகொள்வதில் நான் அக்கறையுள்ளவனாக இருக்கும் அளவுக்கு, ரோமருக்கு எழுதிய நிருபத்தைப் புரிந்துகொள்ளாமல் நீங்கள் பரலோகம் செல்ல முடியுமா இல்லையா என்பது பற்றிநான் அக்கறையுள்ளவனாக இருப்பதில்லை.*

*ஆகாய விமானத்தில் கடலினூடே பறந்து செல்லும் இரு மனிதர்களைப் பற்றிக் கற்பனை செய்துபாருங்கள். ஒரு மனிதர் தெளிவான மனநிலையுடன் - விமானம் மற்றும் விமான ஓட்டி ஆகியோர்மீது நம்பிக்கை கொண்டவராக - இருக்கிறார். அதேவேளையில் இன்னொரு மனிதர் வழிமுழுவதிலும் பயம் அடைந்தவராக இருக்கிறார். இவ்விரு மனிதர்களுமே தாங்கள் சென்று சேரவேண்டிய இடத்திற்குப் பத்திரமாய்ப் போய்ச்சேருகின்றனர்; முதல் மனிதர் விமானப் பயண நேரம் முழுவதையும் மகிழ்வுடன் அனுபவிக்கிறார், ஆனால் அதேவேளையில் அப்பயணம் இரண்டாவது மனிதருக்குச் சித்திரவதையாக உள்ளது. ரோமருக்கு எழுதிய நிருபத்தைப் புரிந்துகொள்ளுதல் என்பது "பரலோகப்பயணத்தை" மேற்கொள்ள உங்களுக்கு பெலம் அளிப்பது மாத்திரமல்ல, அது உங்கள் பயணத்தை* <u>*மகிழ்வுடன் அனுபவிக்கவும்*</u> *உங்களுக்கு உதவும்!*

*நான் இந்தப் பாடத்தை முடிக்கையில், நீங்கள் ஏற்கனவே கர்த்தருக்கு அன்புடன் பதில்செயல் செய்திராதிருந்தால், உடனே அதைச் செய்யும்படி உங்களை உற்சாகப்படுத்துகிறேன். நீங்கள் விசுவாசத்தின் அடிப்படையில் நீதி மானாக்கப்படுகிறீர்கள், ஆனால் கீழ்ப்படிதலுள்ள விசுவாசமே இரட்சிக்கும் விசுவாசமாக உள்ளது. நீங்களும் இயேசுவின்மீதும் அவர் உங்களுக்காகச் செய்துள்ளவற்றின்மீதும் உண்மையான விசுவாசம் கொண்டிருந்தால், இன்றே உங்கள் விசுவாசத்தைக் கீழ்ப்படிதல் மூலம் வெளிப்படுத்துங்கள்.*

---

*குறிப்புகள்*

[1]KJV *வேதாகமம், 4:3-8ல் இவ்வார்த்தையை மொழிபெயர்க்கப் பின்வரும் மூன்று*

சொற்களைப் பயன்படுத்துகிறது: "counted," "reckoned," மற்றும் "impute" (மேலும், "imputeth"). [2]நாம் *logizomai* என்ற இவ்வார்த்தையை இதற்குமுன்பே ரோமருக்கு எழுதிய நிருபத்தில் எதிர்கொண்டிருக்கிறோம். இது 2:26ல் "regarded" ("எண்ணப்படும்") என்றும் 3:28ல் "maintain" ("தீர்க்கிறோம்") என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. [3]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, 1971), 249. [4]John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 125. [5]E. D. Burton, *Galatians: International Critical Commentary* (Edinburgh: T. & T. Clark, 1921), 447. [6]"தகப்பன்" என்பது *propator: pro* ("முன்") கூட்டல் *pater* ("பிதா") என்ற கூட்டுவார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. [7]"மாம்சம்" (*sarx*) என்ற வார்த்தையை நாம் பிந்திய ஒரு அதிகாரத்தின் சந்தர்ப்பப்பொருளில் படிப்போம். இவ்வசனத்தில் *sarx* என்பதன் அர்த்தமானது, இவ்வாக்கியத்தில் "மாம்சத்தின்படி" என்பது எவ்விடத்தில் வைக்கப்பட்டுள்ளது என்பதைச் சார்ந்திருக்கிறது. [8]நான்காம் அதிகாரத்தின் பிற்பகுதியில், பவுல் ஆபிரகாமை "விசுவாசிக்கிற ... அவர்களுக்கு தகப்பன் [*pater*]" என்று அழைத்தார் (வசனம் 11) - அவர்கள் யூதராயிருப்பினும் புறஜாதிகளாயிருப்பினும் அவர்களுக்கு அவர் தகப்பனாயிருக்கிறார் - ஆனால் இவ்வதிகாரத்தின் தொடக்கத்தில், பவுல் யூதர்களுடன் ஆபிரகாம் கொண்டிருந்த மாம்சப்பிரகாரமான உறவுமுறையை மாத்திரம் வலியுறுத்தினார். [9]*The Interlinear Greek-English New Testament: The Nestle Greek Text with a New Literal English Translation by Alfred Marshall* (London: Samuel Bagster & Sons, 1958), 612. [10]Adapted from James R. Edwards, *Romans*, New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1992), 112. A sampling of Jewish quotations on this matter appears in Douglas J. Moo, *Romans*, The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 147.

[11]*The Interlinear Greek-English New Testament,* 612. [12]ஆபிரகாம் மேன்மை பாராட்டியிருந்தால், அவர் தேவனையல்ல ஆனால் தம்மைத்தாமே மகிமைப்படுத்திக்கொண்டிருப்பார் என்பது இச்சொற்றொடரின், சாத்தியமான இன்னொரு அர்த்தமாக உள்ளது. [13]"சொல்லுகிறது" என்ற நிகழ்கால வினையைக் கவனியுங்கள். ஆதியாகமம் 1500 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டிருந்த நிலையிலும்கூட, பவுல் அதை *ஜீவனுள்ள* புத்தகமாகக் கருதினார் (எபிரெயர் 4:12ஐக் காணவும்). அது அவரது நாட்களிலும்கூட இன்னமும் *பேசிக்கொண்டிருந்தது.* [14]"ஆபிரகாமின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுதல்" என்ற பாடத்தில், ஆபிரகாமின் விசுவாசம் பற்றிய கலந்துரையாடலைக் காணவும். [15]"ஆபிரகாமின் பயணங்கள்" என்ற வரைபடத்தைக் காணவும். [16]ஆதியாகமம் 15:6க்கு முன்னதாக மற்றவர்கள்கூட விசுவாசம் கொண்டிருந்தனர் (எபிரெயர் 11:4, 5, 7 ஆகியவற்றைக் காணவும்), ஆனால் ஆதியாகமத்தில் இவ்வார்த்தை இங்குதான் முதன்முறையாகக் காணப்படுகிறது. [17]இந்தப்பகுதியானது, எனது நினைவுகள் மற்றும் 1955ல் J. D. தாமஸ் அவர்களின் வகுப்பில் எடுக்கப்பட்ட ஏராளமான குறிப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது. [18]உங்கள் உரையைக் கேட்பவர்கள் வேதாகமத்தின் இந்த வரலாற்றிற்குப் பழக்கமற்றவர்களாக இருந்தால், நீங்கள் ஆதியாகமம் 22:1-14ன் சுருக்கமான மறுபார்வையை முன்வைக்க விரும்பலாம். ஆபிரகாம் உண்மையில் ஈசாக்கைப் பலியிடவில்லை (ஆதியாகமம் 22:10ஐக் காணவும்) என்றாலும், அதைச் செய்வதற்கான விருப்பநோக்கம் யாவற்றையும் அவர் கொண்டிருந்தபடியால், எபிரெயருக்கு எழுதிய நிருபம் ஆபிரகாம் "ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்தான்" (எபிரெயர் 11:17) என்றே கூறுகிறது. [19]William Barclay, *The Letter to the Romans*, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 64. [20]Moo, 150.